# மஹாவம்சம் : ஸ்ரீலங்கா வரலாறு

தமிழில் சாந்திப்பிரியா
ஆங்கிலத்தில் ஜார்ஜ் டர்னர் மற்றும் வில்லியம் கீஜர்
பின்னர் மாற்றி எழுதியது மேபில் ஹேனஸ் போடே

-185

## 20: புத்த தேரா சமாதி அடைந்தார்

தம்மகோசா ஆட்சிக்கு வந்த பதினெட்டாம் ஆண்டு மஹாமேஹவானரமாவில் போதி மரம் நடப்பட்டது. சம்புத்தரிடம் பெரும் நம்பிக்கைக் கொண்ட அவருடைய அன்பான மனைவி அதற்கு பன்னிரண்டு வருடங்களுக்குப் பின் இறந்து போனாள். அதற்கு அடுத்த நான்கு ஆண்டுகளில் நம்பத்தகுந்தவள் அல்ல எனத் தெரியாமல் திஸ்ஸராக்கா *(Tissarakkha)* என்ற பெண்ணை தன் பட்டத்து இராணியாக்கினார். அதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின் தன்னுடைய அழகை நினைத்து கர்வப்பட்ட அந்த இராணி பொருமினாள். ‘என்னை விட போதி மரத்தை இந்த அரசன் அதிகம் நேசிக்கலாமா’. மாம்பழக் கொட்டையை மாண்டு என்ற முள்ளால் *(mandu-thorn)* குத்தி விட்டால் அது பின்னர் புதைத்தாலும் செடியாக வெளி வராது. அதை மீண்டும் விதைத்தாலும் செடியாக முளைக்காது என்பதை தெரிந்து கொண்டு அதே வழியைப் பின்பற்றி போதி மரத்தை சாகடித்து விட்டாள். அதற்கு அடுத்த நான்கு ஆண்டுகளில் தம்மகோசா மரணம் அடைந்து விட்டார். இப்படியாக அவர் முப்பத்தி ஏழு வருடங்கள் ஆட்சியில் இருந்தார்.

அதற்கு மாறாக தேவனாம்பியதிஸ்ஸா புத்த போதனைகளை நன்கு கற்றுணர்ந்து துாபராமாவிலும், சிடியா மலையிலும் மகா விகாராக்களை கட்டி முடித்தப் பின் தேராவிடம் சென்று ‘ நான் பல விகாராக்களை கட்டி முடித்து விட்டேனே, இனி புத்தருடைய புனித சின்னங்கள் எப்பொழுது எனக்குக் கிடைக்கும் ‘ என்று கேட்டார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

சம்புத்தருடைய சின்னங்களை சுமனா எடுத்து வந்து என்னிடம் கொடுத்த பாத்திரத்தை சிடியா மலை மீது வைத்து உள்ளேன். அவற்றை யானையின் முதுகில் ஏற்றி இங்கு கொண்டு வர ஏற்பாடு செய்.' அப்படியே கொண்டு வரப்பட்ட புனிதச் சின்னங்கள் ஒவ்வொரு யோசனை தூரத்தில் இருந்த ஒவ்வொரு விகாராக்களிலும் தேரா கூறி இருந்தபடி வைக்கப்பட்டது. ஆனால் அந்த புனித சின்னங்களை வைத்து எடுத்து வரப்பட்டிருந்த குடுவையை மட்டும் அரண்மணையில் வைத்து அதற்குப் பலவிதமான பூஜைகளை செய்து மன்னன் வழிபட்டார்.

உயர் குடியினரில் ஐநூறு பேர் தேராவிடம் பப்பஜ்ஜா உபதேசம் பெற்று தங்கி இருந்த விகாராவுக்கு ஈஸராஸமானகா *(Issarasamanaka)* என்ற பெயர் உண்டு. அது போல அந்த விகாராவின் தென் பகுதியில் அனுராதபுரத்திற்கு அருகில் இருந்த வேசகிரி விகாராவில் தங்கி இருந்த வெசாஸ் *(vessas- அந்த காலத்தில் ஜாதியின் மூன்றாம் பிரிவினராக இருந்த வைஷ்யாக்கள்)* எனப்பட்ட பிரிவினரில் ஐநூறு பேர் பப்பஜ்ஜா உபதேசத்தை பெரிய தேராவிடம் இருந்து பெற்று இருந்தனர். சிடியா மலையில் அமைக்கப்பட்டிருந்த செயற்கை குகைகளில் வசித்து வந்த மாபெரும் தேரா மஹீன்தா இருந்த இடம் மஹீன்தா குகை என அழைக்கப்பட்டது.

தேவனாம்பியதிஸ்ஸா தன்னுடைய நாற்பது வருட ஆட்சி காலத்தில் லங்காவிற்கு அனைவரும் பாராட்டும் வகையில் பலரும் பயன் படுத்தும் விதத்தில் தன்னால் முடிந்த அளவு வசதிகளை செய்து கொடுத்திருந்தார். அவர் நிர்மாணித்த இடங்களில் முதலாவதாக மஹா விஹாரா, அடுத்து சிடியா மலையில் தங்கும் குகை, அடுத்து ஸ்துாபி, அடுத்து போதி

தமிழில்
சாந்திப்பிரியா
ஆங்கிலத்தில்
ஜார்ஜ் டர்னர் மற்றும் வில்லியம் கீஜர்
பின்னர் மாற்றி எழுதியது
மேபில் ஹேனஸ் போடே




மர ஸ்தாபனம் , அடுத்து ஸ்துாபிக்குப் போக வழி காட்டும் கல்வெட்டு , அடுத்து சம்புத்தரின் தோள் பட்டை எலும்பை புனித சின்னமாக அமைத்தது , அடுத்து ஈசராாசாமனா, அடுத்து திஸ்ஸா ஏரி, அடுத்து பாதமதுாபா, அடுத்து வேசகிரி உபசிகா மற்றும் ஹதால்ஹகா போன்றவை அடங்கும். பிக்குணிகளுக்கு அமைக்கப்பட்டிருந்த ஹதால்ஹகா என்ற குடிலுக்குச் சென்று அங்கிருந்துதான் அவர்களுடைய சகோதர பிக்குக்கள் உணவு பெற்று வந்தனர். ஆகவே அதற்கு மாற்றாக புதிய மையம் ஒன்றை மஹாபாலி என்ற பெயரில் மன்னன் நிறுவி வருடம் முழுவதும் பிக்குக்களுக்கு குறைவின்றி உணவு கிடைக்க வேண்டிய வசதிக்காக ஏராளமான சமையல் பாத்திரங்கள், குறைவில்லாத உணவுப் பண்டங்கள் போன்றவற்றை அமைத்து இருந்தார். அவற்றைத் தவிற லங்கா மக்களின் ஞான மார்கத்திற்கு வழிகோலும் வழிபாட்டுத் தலங்களை ஜம்புகோலவிகாரா, திஸம்மவிகாரா மற்றும் பாச்சினராமா என்ற பெயர்களில் அமைத்து இருந்தார்.

அந்த மன்னனின் மரணத்திற்குப் பின் பட்டத்திற்கு வர அவருக்கு பிள்ளை இல்லாததினால் அவருடைய சகோதரர் உத்தியா பதவி ஏற்றார். சிடியா மலை குகையில் தங்கி இருந்தவர், பரிபூரண கல்வி அறிவு பெற்றவர், அனைத்திலும் சிறப்பானவர், பலருக்கும் ஞான அறிவு புகட்டியவர், தன்னுடைய குருவின் *(புத்தர்)* போதனைகளை அனைவருக்கும் வழங்கியவர்,தாமே நேரிடியாக வந்திருந்து ஸ்ரீலங்கா மக்களின் நன்மைக்கு பாடுபட்டவர் என்ற அனைத்துப் பெருமைகளையும் பெற்றிருந்த மாபெரும் தேரா மஹின்தா, அந்த மன்னனின் எட்டு வருடகால ஆட்சி முடிந்திருந்த பொழுது அஸயுஜா *(Assayuja)* மாதத்தின் வளர் பிறையின் எட்டாவது நாளன்று தமது எண்பதாம் வயதில், நிபானாவை எய்தினார்.


CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அதைக் கேள்விப்பட்ட மன்னன் உத்தயா மிக்க துயரம் அடைந்து உடனே அவர் மறைந்த இடத்திற்குப் போய் அஞ்சலி செலுத்தி அவருடைய பெருமையை வெகுவாகப் பாராட்டினார். அது மட்டும் அல்லாது அவருடைய உடலை அலங்கரிக்கப்பட்ட ஒரு தங்கப் பேழையில் வைத்து , நறுமணங்கள் தெளித்து, படை வீரர்கள் மரியாதை செலுத்தி வர, ஊர்வலத்தில் பெரும் திரளான மக்களும் வந்து கலந்து கொள்ள, பல சடங்குகளுக்கு இடையே அந்த பேழையை வண்டி ஒன்றில் ஏற்றி அனைத்துத் தலை நகரங்களுக்கும் இடையே இறுதிப் பயண ஊர்வலமாக எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்.

இப்படியாக கொண்டு வரப்பட்ட சவப் பெட்டியை ஒரு வார காலத்திற்கு பன்ஹம்பமாலகா *(Pañhambamälaka)* என்ற இடத்தில் வைத்திருந்தார். அந்த இடத்தை சுற்றி மூன்று யோசனை துாரத்திற்கு தீபகற்பத்தின் நகரெங்கும் இருந்த வீதிகள் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. பூத் தோரணங்கள் கட்டப்பட்டு மரத்திலான வளைவுகள் கட்டப்பட்டன. ஏழு நாட்கள் முடிந்தப் பின் அந்த இடத்தின் கிழக்குப்புறம் இருந்த தேரனாம்பந்தகஹமாலகா *(Theränambandhamälaka)* என்ற இடத்தில் உயரமான பீடம் அமைக்கப்பட்டு அதில் சந்தனக் கட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டு அந்த தேராவின் உடல் இருந்த பேழை இறக்கி வைக்கப்பட அவருடைய இறுதிக் கடன்களை முறையாக செய்த மன்னன் சிதைக்கு தீ மூட்டினார்.

சிடியா மலையிலும் மற்ற விகாராக்களிலும் அந்த புனித தேராவின் புனித சின்னங்கள் வைக்கப்பட்டன. அது மட்டும் அல்லாது அவருடைய இறுதிக் கடன்களை செய்த

இடத்திற்கும் இசிபுமன்கனா *(Isibhumangana )* என்று பெயர் சூட்டப்பட்டு அங்கு அவருக்கு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டது.

அது முதல் அந்த இடத்தின் மூன்று யோசனை துார அளவுக்கு பெரியோர்கள் எவர் மறைந்தாலும் மறைந்தவர்களுடைய உடல் அங்கு தகனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

உத்தியாவின் ஆட்சி காலம் ஒன்பது மாதங்களைக் கடந்த பொழுது ஹதல்ஹக்கா குடிலில் *(Hatthalhaka-convent)* தங்கி இருந்து பலருக்கும் போதனைகள் செய்து நல்வழிக்கு அழைத்துச் சென்ற அற்புதமான சித்திகளைப் பெற்றிருந்த தேரி சங்கமிதாதாவும் நிபானாவை எய்தினார். அவருடைய வயது அப்பொழுது ஐம்பத்தி ஒன்பது. அவளுக்கும் தேரா மஹீன்தாவிற்கு செய்ததைப் போன்றே ஒரு வார கால இராஜ மரியாதையுடன் கூடிய இறுதிச் சடங்குகளை மன்னன் செய்தார்.

அந்த தேரியினுடைய உடலையும் ஒரு வார காலத்திற்கு பல்வேறு இடங்களுக்கும் ஊர்வலமாக எடுத்துச் சென்று துாபராமாவில் போதி மரம் இருந்த இடத்திற்கு அருகில் அந்த தேரி மரணம் அடைவதற்கு முதலிலேயே கூறி இருந்த சிட்டிசாலா *(Cittisala)* என்ற இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. அவளுடைய நிவைாக ஒரு ஸ்துாபியை அந்த இடத்தில் மன்னன் நிறுவினார்.

அதற்குப் பின் சில காலத்திலேயே தேரா மகிந்தாவுடன் சிலோனுக்கு வந்திருந்த ஐந்து தேராக்கள், அரித்தாவின் தலைமையின் கீழ் இருந்த தேராக்கள், சங்கமிதாதாவுடன் இருந்த பன்னிரண்டு தேரிணிகள், துறவிகளான பல

ஆயிரக்கணக்காக தேராக்கள், மற்றும் புத்தரின் வழியில் வந்து போதனைகள் செய்து கொண்டிருந்த பல தேராக்கள் என ஒருவர் பின் ஒருவராக மரணம் அடைந்தனர். புத்திசாலி, மரணத்தைக் கண்டு அஞ்சாமல் உலகில் பற்றற்று இருந்தவர், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் துன்பமோ, இன்பமோ அடையாமல் இருந்தவர் என்ற பெயர் பெற்றிருந்த அந்த மன்னரும் பத்து வருடங்கள் ஆட்சி செய்து மறைந்தார்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபதாம் பாகமான 'புத்த தேரா சமாதி அடைந்தார்' என்ற பகுதி முடிவுற்றது.